*Available online at:* [http://www.advancedscientificjournal.com](http://www.advancedscientificjournal.com)
[http://www.krishmapublication.com](http://www.krishmapublication.com)
*IJMASRI, Vol. 3, issue 1, pp. 509- 513, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# அசோகரின் சமூக நீதி

**முனைவர் க. அலமேலு**

*உதவிப் பேராசிரியர் வரலாற்றுத்துறை. த.ஞா.அ.ம. கலைக்கல்லூரி மயிலாடுதுறை*

**ஆய்வுச் சுருக்கம்**

சந்திரகுப்த மௌரியரின் பேரனும், பிந்துசாரரின் மகனுமான அசோகர் என்றழைக்கப்படும் அசோகவர்த்தனன் பண்டைய இந்தியாவில் ஈடிணையற்ற மகத மாமன்னராக, மௌரியப் பேரரசராகத் திகழ்ந்தார். தனித்துவமிக்க இவ்வரலாற்று மேதை இந்திய வரலாற்றில் அறிவொளிமிக்க அரசராக ஆட்சி செய்தார். மாபெரும் பேரரசை வாரிசாகப் பெற்ற அசோகர் அதைப் புத்த தர்மத்தின் தலைமையமாக மாற்றினார். அறத்தின் அடிப்படையில் இருந்த ஆளுகையும், மக்களின் மகிழ்ச்சியுமே அவரது குறிக்கோலாக இருந்தன. திறந்த மனமும், தாராள உள்ளமும், தர்ம சிந்தமனையுமுள்ள அசோகர் மாற்றுக் கருத்துடையோரின் பங்களிப்புகளையும் உள்வாங்கிக் கொண்டு மௌரியப் பேரரசை வல்லரசுக்குப் பதிலாக நல்லரசாக மாற்றினார். அசோகர் காலத்தால் முந்தைய வரலாற்று மாமனிதர்.

## முன்னுரை

சந்திரகுப்த மௌரியரின் பேரனும், பிந்துசாரரின் மகனுமான அசோகர் என்றழைக்கப்படும் அசோகவர்த்தனன் பண்டைய இந்தியாவில் ஈடிணையற்ற மகத மாமன்னராக, மௌரியப் பேரரசராகத் திகழ்ந்தார். தனித்துவமிக்க இவ்வரலாற்று மேதை இந்திய வரலாற்றில் அறிவொளிமிக்க அரசராக ஆட்சி செய்தார். மாபெரும் பேரரசை வாரிசாகப் பெற்ற அசோகர் அதைப் புத்த தர்மத்தின் தலைமையமாக மாற்றினார். அறத்தின் அடிப்படையில் இருந்த ஆளுகையும், மக்களின் மகிழ்ச்சியுமே அவரது குறிக்கோலாக இருந்தன. திறந்த மனமும், தாராள உள்ளமும், தர்ம சிந்தமனையுமுள்ள அசோகர் மாற்றுக் கருத்துடையோரின் பங்களிப்புகளையும் உள்வாங்கிக் கொண்டு மௌரியப் பேரரசை வல்லரசுக்குப் பதிலாக நல்லரசாக மாற்றினார். அசோகர் காலத்தால் முந்தைய வரலாற்று மாமனிதர்.

## வரலாற்றுச் சான்றுகள்

அசோகரைப் பற்றி அறிந்து கொள்வதற்கான சமகாலச் சான்றுகள் பல உள்ளன. அவற்றுள் முதன்மையானது அவரது கல்வெட்டுகள் (ஐளைஉசனிவழைளை) ஆகும். இக்கல்வெட்டுகள் பாலி மொழியில் பிராமி எழுத்து வடிவில் உள்ளன.

இவை அசோகரின் ஆணையின்படி பொறிக்கப்பட்டவை. இவற்றின் எண்ணிக்கையும், வகைகளும் தேதிகளுடன் கூடிய இக்கல்வெட்டுகள் அசோகரின் ஆளுமை, ஆளுகை, அருமையைப் பற்றி அறிந்து கொள்வதற்கான கல்லாவணங்களாகும். வரலாற்றின் வரப்பிரசாதமாகும். தனித் தன்மையுடைய இக்கல்வெட்டுகள் அசோகரின் பெருமையையும், பெருந்தன்மையும் பறைசாற்றுவனவாக உள்ளன.

**கலிங்கப் போர் கி.மு. 261**

கலிங்கப்போர் வெற்றி அசோகரின் வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. கலிங்கப் போர்க்களத்தில் நிகழ்ந்த பேரழிவைக் கண்ட அசோகர் நெஞ்சம் நெகிழ்ந்தது. பலரைப் கொன்று ஒருவர் வெற்றி பெற வேண்டுமா என்ற வினா அவரது உள்ளத்தில் கூர்வாளாக பாய்ந்தது. போரைக் கைவிட்டு அமைதியை கடைபிடிக்கத் தீர்மானித்தார். அசோகர் கவனம் அகிம்சைப் பேரரசர் புத்தர் பக்கம் திரும்பியது. அசோகர் புத்தமதம் என்ற இரக்க சகரத்தில் இறங்கிவிட்டார். மக்களிடையே புத்த தர்மத்தை போதிப்பதையே தன் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டார். எனவே கலிங்கப்போர் அசோகரது வாழ்க்கையிலும், வாக்கிலும், போக்கிலும், உள்நாட்டு வெளிநாட்டு கொள்கையிலும் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த மாற்றம் இந்திய வரலாறில் திருப்பு முனையை ஏற்படுத்தியது.

**அசோகரின் அமைதிப் புரட்சியும் மனமாற்றமும்**

அசோகர் கலிங்கப்போரால் மனமாற்றமடைந்தார். அவர் பெற்ற மனமாற்ற இன்பத்தை மக்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பினார். **"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** என்று ஆசைப்பட்டார். அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தை மக்கள் அனைவரிடமும் ஏற்படுத்த முனைப்புடன் முற்பட்டார். உண்மையான வெற்றி அறத்தின் வெற்றியேயன்றி மதத்தின் வெற்றியல்ல என்பதை உலகத்தோருக்கு உணர்த்த முடிவு செய்தார் அசோகர்.

ஆக்கிரமிப்புக் கொள்கைக்குப் பதில் அமைதிக் கொள்கையை கடைபிடித்தார். பிற மன்னர்களைப் பற்றி கவலைப்படாமல் அசோகர் தன்னிச்சையாக ஒரு சார்பான அமைதி, அன்பு, அறக்கொள்கையைப் பின்பற்றினார். சமாதானமும் சகிப்புத் தன்மையும் அசோகரின் அமைதிக் கொள்கை நாயணயத்தின் இருபக்கங்களாகும். **திக்விஜயத்துக்குப்** பதில் **தர்மவிஜயத்தை** மேற்கொண்டார் அசோகர்.

**அமைதிக் கொள்கை**

அமைதிக் கொள்கையைப் பின்பற்றிய அசோகர் பெரிய நாடுகளையும் சிறிய நாடுகளையும் ஒன்றாகவே மதித்தார். பெரிய நாடுகள் ஆக்கிரமிப்பு அச்சத்தில் இருந்து விடுபட்டன. சிறிய நாடுகள் சுதந்திரமாக இருக்க இயலும் என்ற நம்பிக்கை பெற்றன. யவனர்கள், கம்போஜர்கள், காந்தாரத்தவர் போன்ற வடமேற்கு இந்திய அரசுகளும்: நபாபதிகள், போஜர்கள், ஆந்திரர், புலிந்தர், ரா'ட்ரிகர், பிட்டினிசர் போன்ற மத்திய இந்திய அரசுகளும்: சேர, சோழ, பாண்டிய அரசுகளும்: சுதந்திரமான, சமமான நட்பு நாடுகளாகக் கருதப்பட்டன. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடிப்படையில் இந்திய அரசுகள் அனைத்தும் ஒரு குடும்பமாக வாழ வேண்டும் என்பதே அசோகரின் கனவாக இருந்தது. இதுவே அசோகர் நடத்திய அமைதிப் புரட்சியாகும்.

**அசோகரின் அறநெறி உபாசகர்**

அசோகர் ஒரு உபாசகர் (ருியளயமய). உபாசகர் என்பவர் புத்தரிடம் அடைக்கலமாகி, புத்த தர்மத்தை வாழ்க்கை நெறியாகக் கொண்டு, புத்த சங்கத்தின் மூலம் புத்த தர்மத்தை பரப்புவர். அசோகர் புத்தவசனத்தை (டீரனனாயஎயஉாயயெ) ஏற்றுக் கொண்டார். அதாவது புத்தரின் 4 பேருண்மைகளையும், அதை அடைவதற்கான 8 மார்க்கங்களையும் தந்த வாழ்க்கையின் வழிகாட்டு விதிகளாகக் கொண்டார் அசோகர்.

**சமூக நீதி**

அசோகர் புத்தரின் போதனைகளைப் பிறருக்குப் போதிப்பதற்கு முன் தன்னை முன்னுதாரணமாக்கிக் கொண்டார். பிறர் பின்பற்றுவதற்கான எடுத்துக்காட்டாய் திகழ்ந்தார். புத்தர் மதத்தைச் சொன்னார். சொல்லியபடி செய்து முடித்தார். அன்பையும், அறத்தையும், பொறாமையுடைமையையும், தாராள மனப்பான்மையையும் பண்மையில் ஒருமை காணும் பண்பையும்: சாதி, மத, நிற வேறுபாடு காட்டாமல்

மக்களை மக்களாக மதிக்கும் தாராள மனப்பான்மை போன்ற பண்புகளை தனக்குள்ளேயே வளர்த்துக் கொண்டார். வேட்டையாடலை நிறுத்தினார். அரசு மாளிகையில் உணவுக்காக விலங்குகள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது. அசோகர் புலால் உண்பதை கைவிட்டார். இதேபோன்று சடங்குகளின் போது விலங்குகள் பலியிடுவது தடை செய்யப்பட்டது. தன்னையும், தனது அரண்மனையையும் திருத்திக் கொண்ட பின் மக்களை மாற்றும் பணியை துவக்கினார் அசோகர்.

### சமூகநல நடவடிக்கைகள்

பொது மக்கள் புத்த நெறியை பின்பற்றுவதற்காக பல நல நடவடிக்கைகளை மேற்கொண்டார். மனிதர்களும் விலங்குகளும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்ற கருத்து பிரச்சாரம் செய்யப்பட்டது. மக்களுக்கும், விலங்குகளுக்கும் மருத்துவமனைகள் கட்டப்ட்டன. பறவைகளையும் விலங்குகளையும் கொல்லக் கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. சில நாட்களில் மீன்களைப் பிடிப்பதோ விற்பதோ தடை செய்யப்பட்டது. அதே போன்று மிருகங்களுக்கு சூடு போடுவதோ, அவற்றை மலடாக்குவதோ நிறுத்தப்பட்டது. தண்ணீா் தேவையைப் பூர்த்தி செய்ய கிணறுகள் தோண்டப்பட்டன. தண்ணீாப பந்தல்கள் போடப்பட்டன.

### சமயப் பரப்பாளர்கள் தர்மமகாமத்திரர்கள்

புத்ததர்மத்தை பரப்புவதற்காக அசோகர் தா்மகாமத்திரா்கள் என்ற சமய பரப்பூமியா்களை நியமித்தாா். இவா்கள் புத்ததா்மத்தைப் பரப்பியதோடு, இதற்காக நிறுவப்பட்ட அமைப்புகளின் பணிகளையும் மேற்பாா்வையிட்டனா். இச்சமய பரப்பாளரா்கள் ஊா் ஊரகப் பயணம் செய்து புத்தரின் போதனைகளை மிகுந்த ஈடுபாட்டுடன் பிரச்சாரம் செய்தனா். இவா்கள் மக்களின் ஒழுக்க வாழ்வியல் பற்றியும் மக்களுக்கு எடுத்துறைத்தனா். மகாமத்திரா்களின் பிரச்சாரம், வாழ்க்கை முறை மற்றும் நடவடிக்கைகளின் விளைவாக புத்த சமயம் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றது.

### பிரகடனங்கள்

அசோகரின் கல்வெட்டுக் குறிப்புகள் ஆணைகள் என்று அழைக்கப்படுகின்றன. ஆணைகள் சட்டப் பூா்வமாக பிறப்பிக்கப்படும் அரசாங்க உத்தரவுகள். இந்த ஆணைகள் மீறுவோா் சட்டப்படி தண்டிக்கப்படுவா். அசோகா் இந்த அா்த்தத்தில் ஆணைகளைப் பிறப்பிக்கப்படவில்லை. மாறாக இவரது ஆணைகள் பிரகடனங்கள், புத்திமகள், வேண்டுகோள்கள். முதலாவதாக, இவையனைத்தும் சாதி, சமய, நிற தொழில் வேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவானவை. இரண்டாவதாக இப்பிரகடனங்கள் தனிமனித பொது வாழ்க்கை ஒழுக்கம், கட்டுப்பாடு பற்றியவை.

### அசோக தர்மக் கொள்கைகள்

பாடலிபுத்திரத்தில் கூட்டப்பட்ட மூன்றாவது புத்த மாநாடு புத்தத் துறவிகளிடையே கட்டுப்பாடு சீா்கெட்டுருந்ததை தெளிவாக வெளிபடுத்தியது. புத்தமாா்க்கம் புத்த மதமாக மாற்றப்பட்டு, புத்தரின் 4 பேருண்மைகள், சமூக மாா்க்கத்திலிருந்து வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டது. இதை நன்கறிந்த அசோகா் புத்தரின் போதனைகளின் சாரத்தை உள்வாங்கிக் கொண்டு, தன்வயப்படுத்தி, மக்கள் எளிதில் புரிந்துகொண்டு பின்பற்றக்கூடியதான தர்மத்தை வெளியிட்டாா். இதுவே அசோக தா்மம் (யுளாழமய’ள னுாயசஅய) என்றழைக்கப்படுகிறது.

### சிறப்புக் கூறுகள்

மூத்தோா் மதிக்கப்பட வேண்டும். இளைஞா்கள் நேசிக்கப்பட வேண்டும். உறவினா்கள், பணியாளா்கள், சாா்ந்திருப்போா், நண்பா்கள், தெரிந்தவா், ஆதரவற்றோா், ஏழை எளியோா் போன்றோரை மரியாதையுடன் நடத்தி, முடிந்த உதவியை செய்ய வேண்டும்.

மக்கள் பின்பற்ற வேண்டிய வாழ்க்கை வழிகாட்டு விதிகள்: அன்பு, பரந்த மனப்பான்மை. மரியாதைக்குரிய, நற்பண்பு, மிதமாக சம்பாதித்து செலவு செய்தல், சுய கட்டுப்பாடு, நன்றி பாராட்டல், ஒழுக்க வாழ்க்கை.

உயிா் வாழ்வன அனைத்தும் சமம் இவா்களின் உணா்வுகளை மதிப்பதே அகிம்சை. விலங்குகளை பலியிடுவது இம்சை. எவ்விதமான வேறுபாடின்றி மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டும்.

### நிர்வாகம்

அரசாங்கத்தின் ஆதரவின்றி எந்த திட்டமும் வெற்றி பெறாது. திட்டத்தின் வெற்றி அதிகாரிகள் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்துள்ளது. அதிகாரிகளின் செயல்பாடுகள் அவர்களது கடமையுணர்வையும், ஈடுபாட்டையும், சுயகட்டுப்பாட்டையும் சார்ந்துள்ளன. எனவே அசோகர் தர்ம நீதி செயல்படுத்துவதற்காக அதிகாரிகளையும், அலுவலர்களையும் அதிக அக்கறையுடன் தெரிவு செய்தார். இந்த அதிகாரிகளின் வரிசையும், பொறுப்புகளும் நடவடிக்கைகளும் மிகத் தெளிவாக இருந்தன.

அசோகரின் நிர்வாக ஏற்பாட்டின்படி அவரது ‘ஆணைகள்’ முதலில் ராஜீகாக்களும் அனுப்பி வைக்கப்பட்டன. இவர்கள் அரசர்களின் வேண்டுகோள்களை மக்களுக்குப் பிரகடனப்படுத்துவர். அதன்பின் தர்மநெறிப் பரப்பாளர்கள் அவற்றை அவர்களது சீடர்களுக்குச் சொல்லிக் கொடுப்பர். அச்சீடர்கள் வாழ்க்கை தர்மநெறிகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பர். இவர்களை மேற்பார்வையிடுவதற்காக சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் தர்மகாமத்திரர்கள், தர்மாயுக்தரர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் முறையே தணிக்கையாளர்கள், துணைத் தணிக்கையாளர்கள் ஆவர். இவர்களின் பொறுப்பு புத்ததர்மம் முறையாக, ஒழுங்காக, சீராக, மக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி, நடைமுறைப்படுத்தப் படுகின்றனவா என்பதை தணிக்கை செய்வதாகும். ஏனெனில் தர்மத்திட்டம் செயல்படுத்தப்படல் வேண்டும். திணிக்கப்பட கூடாது. இத்தணிக்கையாளர்கள் அரசாங்க அதிகாரிகளால் மக்களுக்கோ அல்லது விலங்குகளுக்கோ இன்னல்கள் ஏற்படுகின்றனவா என்று கவனமாக கண்காணித்தனர். விதி மீறல்கள் ஏற்பட்டால் அதனை சரிசெய்தார். அவசியமாயின் முதியோர், மாற்றுத்திறனாளிகள், இயலாதோர் பெண்கள் போன்றோர்க்கு குற்றச் சட்டங்களிலிருந்து விலக்களித்தனர். பெண் தணிக்கையாளர்கள் நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தர்மத்தை பரப்புவதற்காகவும், அப்பணி ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காகவும் நியமிக்கப்பட்ட பிரச்சாரகாரர்களும், அரசாங்க அதிகாரிகளும், அலுவலர்களும், தணிக்கையாளர்களும், பேரரசு முழுவதும் நீக்கமற நிறைந்திருந்தனர்.

அறம் பொதுப்பண்பு, சமயமும், சாதியும் மக்களைப் பிரிக்கும். அன்பும், அறமும் மக்களைச் சேர்க்கும். இந்த அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்ட அசோக தர்மம் இந்திய தேசியத்துக்கு விதிக்கப்பட்ட முதல் விதையாகும்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை அசோக தர்மத்தின் மூன்று முகங்கள். அசோகர் மக்களின் மனதைக் கவரும், சந்தரப்பவாதியல்லர். அவர் மக்களின் அறிவையும், மனதையும், வாழ்க்கையையும் உயர்த்துவதற்கான வழியைக் காட்டிய தீர்க்கத்தரசி. அசோகரின் ‘ஆணைகள்’ அன்புக் கட்டளைகள், சகோதர கோரிக்கைகள், அவரது மனஉறுதிபாட்டின் வெளிப்பாடுகள். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த புத்த மார்க்கத்துக்கு புத்தொளியும், புதிய வாழ்க்கையையும் கொடுத்தவர். புத்தருக்கு அடுத்தபடியாக போற்றுதற்குரியவர் அசோகர்.

### முடிவுரை

அசோகர் தர்மக் கொள்கைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை ஆளுகை (புழஎநசயஉந) க்கும் அளித்தார். அசோகரின் ஆட்சி அன்பாதரவான உதவிமனப்பான்மை உடைய, நட்பிணக்கமான முடியாட்சி ஆகும். முடியாட்சி நல்லாட்சி. அசோகரது ஆளுகை கருணையும், கண்டிப்பும் கலந்த மக்கள் நல ஆட்சி. அவர் மாகாண ஆளுநர்களுக்கு செயல் சுதந்திரம் கொடுத்தார். அதனால் அவர்கள் (சுயதரமயள) மக்களுக்கு நன்மை செய்தோரைப் பாராட்டினர். கெடுதல் செய்தோரை தண்டித்தனர்.

அரசாங்க அதிகாரிகளும் அலுவலர்களும் மக்களின் மகிழ்ச்சியைப் பெருக்கித் துன்பத்தைக் குறைத்தனர். அசோகரின் ஆணைக் குறிப்பிடுவதைப் போன்று ஆளுநர்களும் அதிகாரிகளும் சிறந்த செவிலியர்கள், குழந்தையைப் பார்த்துக் கொள்வதைப் போன்று மக்களின் நலனைப் பாதுகாத்தனர். அசோகர் அனைத்து மக்களையும் தம்மக்களாகவே

கருதினார். சோம்பேறிகள் சுறுசுறுப்பாக வேலைசெய்ய மாட்டார்கள். அவர்களிடமிருந்து வேலை வாங்க வேண்டும்.

குற்றவாளிகள் தானாக திருந்தமாட்டார்கள். அவர்களை தண்டனை மூலம் திருத்த வேண்டும். அதிகாரிகள் நியாயமாக நடந்து கொண்டு, மக்களுக்கு நீதி வழங்கினால் நியாயத்தை உணர்த்த நல்லவர்கள் அரசாங்கத்தை ஆதரிப்பர் என்று உணர்ந்து தனது தர்மக் கொள்கையின் மூலம் சமூக நீதியை செயல்படுத்தினார்.

.
.

**பார்வை நூல்கள்**


1. கே. ராமமூர்த்தி, மாமன்னர் அசோகர், கலா நிலையம், சென்னை.
2. அசோக் கே. பேங்கர், அசோகா மௌரிய சிங்கம், பாவை பதிப்பகம், மதுரை.
3. குன்றில்குமார், சக்கரவர்த்தி அசோகர், சங்கர் பதிப்பகம், சென்னை.
4. ஜே. தர்மராஜன், இந்திய வரலாறு, ஏழட-ஐஇ பாவை பப்ளிகே‘ன், ராஜபாளையம்


*****